**‘பணியிட சட்டங்கள்’ (workplace laws) குறித்த முக்கியமான மாற்றங்கள் பற்றிய தகவல்**

‘மாநில தொழில் உறவுகள் முறைமை’(state industrial relations system)யினால் காப்பு செய்யப்பட்ட அனைத்து நியூ சவுத் வேல்ஸ் மாநில முதலாளிகளும் அவர்களது தொழிலாளிகளும் (பிரதானமாக தனித்தியங்கும் வியாபாரிகள் மற்றும் பங்கு-வியாபாரங்கள் (sole traders and partnerships)) ‘தேசிய நியாய பணி முறைமை’ (national Fair Work System) எனும் புதிய முறைமையைப் பின்பற்றுவர்.

நியூ சவுத் வேல்ஸ் மாநில தொழில் உறவுகள் சட்ட(NSW industrial relations laws)ங்களினால் நீங்கள் பணியாற்றும் இடம் காப்பு செய்யப்பட்டிருப்பின், புதிய தேசிய திட்டத்திற்கு மாறுவதை உறுதி செய்யும் பொருட்டு நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சில முக்கியத் தகவல்கள் உள்ளன.